பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
கணபதி களஞ்சியம்
பலாலி வீதி,
உரும்பிராய்.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 16 ஞாயிற்றுக்கிழமை (31-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 12

## ★ 3ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் பின்
# யுத்த நிறுத்த அறிவிப்பொன்றை
# ஜனாதிபதி வெளியிடுவார்?

### தொழில் அமைச்சர் அலவிமௌலானா தகவல்



(எமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் விடுக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பு சம்மந்தமாகவும். அதனை அடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள சாதக பாதக சூழ்நிலைகள் தொடர்பாகவும் ஆராய்வதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நாளை மறுதினம் 2ம் திகதி கூடவுள்ளது.

இக் கூட்டத்தை அடுத்து 3ம் திகதி புதன்கிழமை கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின் பின் யுத்த நிறுத்தம் தொடர்பான சர்வதேச அழுத்தங்களை கருத்திற் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிடுவார் என சிரேஷ்ட அமைச்சர் அலவிமௌலானாவை மேற்கோள் காட்டி அரசியல் ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் கூடவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்புத் தொடர்பாக பல கோணங்களிலும் விரிவாக ஆராயப் படவுள்ளது.

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பையடுத்து சர்வதேச அழுத்தம் ஏற்பட்டிருப்பதினால் அது குறித்து பெரும்பான்மை இன சிங்கள மக்க

(8 ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டை முன்னிட்டு இன்று இரவு 8 மணி முதல் நாளைக் காலை 6மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்குமென படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர் (ந)

## ஜனவரி 3ஆம் திகதி அடையாள அணிவகுப்பு

மிருசுவில் படுகொலைச்சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பொன்று ஜனவரி மாதம் 3ம் திகதி நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் அவரது வாசஸ்தலத்தில் இடம்பெறவிருக்கும் இந்த அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர்கள் அனைவரையும் ஆஜர் படுத்துமாறு நீதவான் பொலிசாருக்கு உத்தர விட்டுள்ளார். (வ - 23)

## மிருசுவில் படுகொலை 6 சந்தேக நபர்கள் ஆஜர்

(மந்திகை)

மிருசுவில் படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரிகள் என சந்தேகிக்கப்படும் ஆறு இராணுவத்தினர் ஊரடங்கு வேளையில் நேற்று முன்தினமிரவு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கரின் முன்னிலையில் அவரின் வாசஸ்தலத்தில் ஆஜர் செய்

(8ம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை சம்பவங்கள்
## பலகோண விசாரணைபற்றி நீதவானிடம் சிரேஷ்டபொலிஸ்அத்தியட்சகர்தெரிவிப்பு

(மந்திகை)

மிருசுவில் பகுதியில் படுகொலை செய்தார்கள் என்ற சந்தேசத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளில் முன்னேற்றம் இருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி குணசேகரா தெரிவித்துள்ளார்.

இப் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளின் போக்கு சம்பந்தமாக சாவகச்சேரி மாவட்டநீதிபதி அன்னலிங்கம் பிரேம் சங்கரிடம் யாழ் சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் உபாலி குணசேகரா தெரிவிக்கையில் கூறியதாவது.

மிருசுவில் படுகொலைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப் பட்டுவரும் பொலிஸ் விசாரணைகளில் முன்னேற்றமும், திருப்தியும் இருப்பதாகவும் இக்கொலைகள் தொடர்பாக பல கோணங்களிலும், பொலிஸ் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ-23)

## மகேஸ்வரன் மீது பொலிஸ் விசாரணை

(மந்திகை)

கடந்த 19ம் திகதி மிருசுவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்திலிருந்து தெய்வாதீனமாக தப்பிவந்த பொன்னுத்துரை மகேஸ்வரன் படுகொலைச் சம்பவம் தொடர்பாக நேற்று பருத்தித்துறைப் பொலிசாரினால் விசாரிக்கப் பட்டுவருகிறார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான பூர்வாங்க விசாரணை நேற்று வரை தொடர்ந்துநடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். (வ.23)

## புலிகள் வழங்கிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன்படுத்தவேண்டும்

(கண்டி)

''தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தை தீர்க்கமானதொன்றாக அரசாங்கம் கருதியுத்தத்தை நிறுத்திபேச்சுவார்த்தை ஆரம்பிக்கவேண்டும்.

அரசியல் யாப்பினை நிறைவேற்றுவதற்கான அமைப்பு கண்டிபோகம்பரை மைதானத்தில் நடத்திய கூட்டத்தில் பேசிய மாதம்பாகம அஸ்திதேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது

விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாது

(8ஆம் பக்கம் பார்க்க)

## திருவெம்பாவைமுன்னிட்டு ஊரடங்குச்சட்டம் தளர்வு

(யாழ்ப்பாணம்)

இன்று 31ம் திகதி ஆரம்பமாகும் திருவெம்பாவையொட்டி குடாநாடு பூராகவும் இரவு நேர ஊரடங்கு அதிகாலை 4 மணியுடன் தளர்த்கப்படவுள்ளது, இவ் ஊரடங்கு நேரத்தளர்வு இன்று ஆரம்பமாகி திருவெம்பாவைஉற்சவகாலம் முடிவடையும் வரை பத்து நாட்களுக்கு அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு இந்து ஆலயமகா சபையினர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் உட்பட பல்வேறு சைவ ஆலயசபையினர் வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இது குறித்து வேண்டுகோள் விடுத்தனர். இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதன் பேரில் ஊரடங்கு தளர்வு அமுல் படுத்தப்படவுள்ளது. (ந)

## யுத்த நிறுத்த அறிவிப்பானது புலிகளின் தந்திரோபாயமே

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுதத அறிவிப்பானது அவர்களது தந்திரோபாயமான நடவடிக்கை என வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் போட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்திய தூரதர்ஷன் தொலைக்காட்சி சேவைக்கு அமைச்சர் கதிர்காமர் பேட்டி ஒன்றைநேற்று வழங்கியிருந்

(8-ம் பக்கம் பார்க்க)

## மினி திரையரங்கு முற்றாக எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதி, கல்லூரி ஒழுங்கையில் இயங்கி வந்த மினி திரையரங்கு நேற்று இனந்தெரியாதோரால் தீயிட்டு கொளுத்தப் பட்டது.

நேற்றுஇரவு 7மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் ஓலையினால் வேயப் பட்டிருந்த திரையரங்கு முற்றாக எரிந்து சாம்பராகியதுடன் அங்கிருந்த தொலைக் காட்சிப் பெட்டியும் எரிந்ததாகத்தெரிவிக்கப்படுகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம்மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி. வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகிறன.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 140552 ஏ | 140552 பி |
| 140552 சி | 149973 ஏ |
| 163277 ஏ | 168710 ஏ |
| 168710 பி | 171778 ஏ |
| 171778 பி | 171778 சி |
| 171792 ஏ | 172009 ஏ |
| 172009 பி | 173467 ஏ |
| 173478 ஏ | 173497 ஏ |
| 173528 ஏ | 173528 பி |
| 173528 சி | 173528 டி |
| 173528 ஈ | 173530 ஏ |
| 173530 பி | 173577 ஏ |
| 173602 ஏ | 173602 பி |
| 173733 ஏ | 173733 பி |
| 173733 சி | 173858 ஏ |
| 173858 பி | 173858 சி |
| 173864 ஏ | 175227 ஏ |
| 175227 பி | 175227 சி |
| | 175227 டி |
| 175227 ஈ | 175227 எவ் |
| 175232 ஏ | 175232 பி |
| 175252 ஏ | 175252 பி |
| 175296 ஏ | 175307 ஏ |
| 175307 பி | 175314 ஏ |
| 175379 ஏ | 175379 பி |
| 175379 சி | 175421 ஏ |
| 175424 ஏ | 175424 பி |
| 175437 ஏ | 175442 ஏ |
| 175442 பி | 175442 சி |
| 175457 ஏ | 175457 பி |
| 175457 சி | 175457 டி |
| 175459 ஏ | 175459 பி |
| 175494 ஏ | 175497 ஏ |
| 175497 பி | 175552 ஏ |
| 175552 பி | 175606 ஏ |
| 175606 பி | 175606 சி |
| 175606 டி | 175606 ஈ |
| 175606 எவ் | 175606 ஜி |
| 175607 ஏ | 175607 பி |
| 175607 சி | 175607 டி |
| 175607 ஈ | 175611 ஏ |
| 175641 ஏ | 175711 ஏ |
| 178030 ஏ | 179053 ஏ |
| 179054 ஏ | 175059 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 168800 ஏ | 175408 ஏ |
| 175439 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| | 158897 பி |
| 158897 சி | 166026 ஏ |
| 166026 பி | 166026 சி |
| 166026 டி | 166167 ஏ |
| 166167 பி | 166181 ஏ |
| 166181 பி | 166181 சி |
| 166181 டி | 166181 ஈ |
| 168728 ஏ | 168734 ஏ |
| 168764 ஏ | 168764 பி |
| 168764 சி | 168822 ஏ |
| 166897 ஏ | 171724 ஏ |
| 171724 பி | 171779 ஏ |
| 71779 பி | 171779 சி |
| 172018 ஏ | 172022 ஏ |
| 172030 ஏ | 172066 ஏ |
| 172086 ஏ | 172086 பி |
| 172086 சி | 172086 டி |
| 173461 ஏ | 173590 ஏ |
| 173601 ஏ | 173601 பி |
| 173616 ஏ | 173616 பி |
| 173683 ஏ | 173683 பி |
| 173683 சி | 173683 டி |
| 173683 ஈ | 173683 எவ் |
| 173712 ஏ | 173716 ஏ |
| 173768 ஏ | 173796 ஏ |
| 173796 பி | 175226 ஏ |
| 175231 ஏ | 175231 பி |
| 175245 ஏ | 175266 ஏ |
| 175266 பி | 175268 ஏ |
| 175294 ஏ | 175294 பி |
| 175332 ஏ | 175332 பி |
| 175394 ஏ | 175405 ஏ |
| 175453 ஏ | 175464 ஏ |
| 175468 ஏ | 175475 ஏ |
| 175511 ஏ | 175511 பி |
| 175517 ஏ | 175526 ஏ |
| 175526 பி | 175536 ஏ |
| 175539 ஏ | 175560 ஏ |
| 175560 பி | |

(ச)

இம்மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 154064 ஏ | 166407 ஏ |
| 171677 பி | 171677 சி |
| 173842 ஏ | 173842 பி |
| 173842 சி | 173842 டி |
| 173842 ஈ | 175253 ஏ |
| 175253 பி | 177253 சி |
| 175253 டி | 175260 ஏ |
| 175308 ஏ | 175308 பி |
| 175308 சி | 175308 டி |
| 175316 ஏ | 175328 ஏ |
| 175328 பி | 175331 ஏ |
| 175350 ஏ | 175392 ஏ |
| 175459 ஏ | 175459 பி |
| 175467 ஏ | 175467 பி |
| 175467 சி | 175480 ஏ |
| 175480 பி | 175497 ஏ |
| 175497 பி | 175527 ஏ |
| 175527 பி | 175552 ஏ |
| 175552 பி | 178044 ஏ |
| 178044 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 173527 ஏ | 173527 பி |
| 173267 ஏ | 173267 பி |
| 173267 சி | 173591 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 163396 ஏ | 166406 ஏ |
| 168657 ஏ | 168657 பி |
| 168657 சி | 168657 டி |
| 171677 ஏ | 171770 ஏ |
| 171770 பி | 171770 சி |
| 171958 ஏ | 172027 ஏ |
| 173694 ஏ | 173594 பி |
| 172594 சி | 173594 டி |
| 173764 ஏ | 175241 பி |
| 175247 ஏ | 175426 ஏ |
| 175363 ஏ | 175463 பி |
| 175468 ஏ | 175615 ஏ |
| 175636 ஏ | 1781;2 ஏ |

(ச)

### மிருசுவில் படுகொலைச் சம்பவம்

# விசாரணைகள் காலதாமதமாவது

# சூத்திரதாரிகள் தப்ப ஏதுவாகலாம்

### ஈ. பி. ஆர். எல் எவ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மிருசுவிலில் எட்டுப் பேர் குரூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து சம்பந்தப்பட்டோரைசட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கைகள் மேற்சொள்ளப் பட்டாலும் கூட அவை திருப்திகரமாக இல்லாததுடன் நாட்கள் செல்ல சூத்திரதாரிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப வாய்ப்பு ஏற்படும்.

மிருசுவில் பகுதியில் படுகொலை தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் (வரதர் அணியினர்) விடுத்தசெய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ் மிருசுவில் பகுதியில் எட்டு உள்ளூர் வாசிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது அதிர்ச்சியை ஏற்படுத்தும் காட்டுமிராண்டித்தனமான செயலாகும். செம்மணி படுகொலைகள் தொடர்பாக அரசு மேற்கொண்ட திறந்த விசாரணைகளின் பின்னர் இவ்வாறான படுகொலைகள் மீண்டும் நடப்பதற்கு அரசு அனுமதிக்காது என்ற எதிர்பார்க்கை இருந்தது

ஆனால் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் சம்பவங்கள் இலங்கை அரசின் மனித உரிமைகளின் பாதுகாப்புத் தொடர்பாக பல தீவிரமான கேள்விகளை எழுப்ப வழி வகுக்கின்றன.

பிந்துனுவெவ படுகொலைகளை அடுத்து நடைபெற்ற மிலேச்சத்தனமான படுகொலைஇதுவாகும். பிந்துனுவெவப் படுகொலைகள் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்களே அதிகம். மிருசுவில் படுகொலைகள் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகைய படுகொலைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தின் மீது மட்டுமல்ல அரசின்மீதும்அபகீர்த்தி ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

இந்த எட்டுப்பேரின் படுகொலையும் மிகவும் குரூரமாக நடைபெற்றுள்ளன. கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் ஒரு ஐந்து வயதுச் சிறுவனின் கால் முறிககப்பட்டுள்ளது. இந்தப் படுகொலை அமைதி சமாதானத்தை நேசிக்கும் மக்களைக் கூட ஆத்திரமூட்டுவதாகவேஉள்ளது. இந்த அப்

(6ம் பக்கம் பார்க்க)

### கல்லூரி அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையில் தற்காலிகமாக நடைபெற்ற நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை எதிர் வரும் 2 ஆம் திகதி தொடக்கம் சட்டநாதர் சிவன் கோவிலடியில் உள்ள நடராஜா ஆங்கிலக் கல்வி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே சகல மாணவர்களும் புதிய இடத்திற்கு சமுகம் கொடுக்குமாறு மேற்படி கல்லூரி அதிப தெரிவித்துள்ளார். (க)


## விஞ்ஞானபீடம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

விஞ்ஞான பீட மாணவர்கள் அனைவருக்குமான கூட்டமொன்று 01-01-2001 திங்கட்கிழமை மு. ப. 10 மணிக்கு கனகசபாபதி மண்டபத்தில் நடைபெறும். சகல மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விஞ்ஞான பீடாதிபதி

30-12-2000 (2056)

## ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)
சிம்ரன்
நடித்த
சம்மதம் தருவாளா
புதிய வெளியீடு
(CD பிரதி)
10.30, மட்டும்

சிவாஜி பானுமதி
நடித்த
ராணி லலிதாங்கி
2.15 (ப.நே)
(கி-688)

## நாகம்ஸ்

டைட்டானிக் என்ற கப்பலில் நடந்த பயங்கரமான உண்மைச்சம்பவத்துடன் சுவாரசியமான காதல் கதையும் பிணைக்கப்பட்டு உலகு எங்கும் எதிரொலிக்கும்

டைட்டானிக்

(தமிழ்-ரீல்ஸ்)
காட்சிநேரங்களில் மாற்றம்
10.30 : 2.30 (பு:நே)
(கி/818)


## பிரிவுத்துயர் பகிர்வு

### கதிரவேலு விஜயரத்தினம்

மானிப்பாயைச் சேர்ந்த கதிரவேலு விஜயரத்தினம் (விசயன்) 29. 12. 2000 அன்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

தகவல்: மு. விக்னேஸ்வரன்
வை. குணசேகரம்

### வேலுப்பிள்ளை கந்தையா

அரியாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா 28 ஆம் திகதி காலமானார்.

இறுதிக்கிரியைகள் நேற்று அன்னாரின் தற்காலிக வதிவிடமாகிய வட்டுக்கோட்டையில் நடைபெற்றன.

தகவல்: வி. கே. சண்முகலிங்கம் (மகன்)

### செல்லையா பொன்னுத்துரை

கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த செல்லையா பொன்னுத்துரை 29 ஆம் திகதி காலமானார்

தகனக்கிரியைகள் நேற்று வட்டுக்கோட்டையில் நடைபெற்றன.

தகவல்; திருமதி ச. லலிதா

### திருமதி தங்கமுத்து மாணிக்கவாசகர்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கமுத்து மாணிக்கவாசசர் 29. 12. 2000 அன்று சிவபதமெய்தினார்.

தகவல்: திருமதி மணிமேகலை சிவலிங்கம் (மகள்)

### திருமதி இரத்தினம்மா தளையசிங்கம்

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைச் சேர்ந்த இரத்தினம்மா தளையசிங்கம் 29 ஆம் திகதி மட்டக்களப்பில் காலமானார்.

இறுதிக்கிரியைகள் இன்று மட்டக்களப்பில் நடைபெறும்.

தகவல்: த.சண்முகநாதன் (மகன்)

# யாழ். மாவட்டத்தில் மருந்துகள் அதிக விலையில் விற்கப்படுகின்றது

### சுகாதார பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க யாழ். மாவட்டத்தில் கூடுதலான விலையில் மருந்துகள் விற்கப்படுகின்றன. இது தொடர்பாக பொதுமக்கள் பலராலும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி ஆங்கில மொத்த மருந்து விற்பனையாளருடன் நடத்திய கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும்தெரிவிக்கையில்; மேற்படி மருந்துகள் கொள்வனவு, ஏற்றியிறக்கற் கூலி சேதாரம் என்பவற்றை உள்ளடக்கி சுகாதாரப் பணிமனையின் கண்காணிப்புடன் மருந்துகளின் விலையைநிர்ணயத்தை ஆங்கில மொத்த விற்பனையாளர் ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து யாழ் மாவட்ட சில்லறை ஆங்கில மருந்து விற்பனையாளர்கள் தாங்கள் மொத்த வியாபாரிகளிடமிருந்து கொள்வனவு செய்யும் விலையிலிருந்து எச்சந்தர்ப்பத்திலும் 15% இற்கு மேற்படாமல் விற்பனைசெய்வதாக ஒத்துக் கொண்டார்கள். அத்துடன் தமது மருந்தகங்களில் விற்கும் எல்லா மருந்துகளின் விற்பனை விலையை மக்கள் பார்வையிடுவதற்காக விலைப்பட்டியல் ஒன்றை மக்கள் பார்வைக்கு வைப்பதற்கு உடன்பட்டார்கள். மேலும் விற்பனைசெய்யும் மருந்துகளிற்கு பற்றுச்சீட்டு வழங்குவதாகவும் முடிவு எடுக்கப்பட்டது.

தற்போதைய யாழ்மாவட்டத்திலுள்ள ஆங்கில மருந்தகங்களிலுள்ள தரக் குறைபாடுகளைப் பற்றி பணிப்பாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து சகல சில்லறை ஆங்கில மருந்து விற்பனையாளர்களும் ஆங்கில வைத்தியர்களால் வழங்கப்படும் மருந்துச்சிட்டைகளிற்கு மாத்திரம் மருந்துகளை விற்பனை செய்வதாகவும் அது தொடர்பான பதிவேடுகளை முறையாகப் பேணுவதாகவும் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடலில் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உ. சிவபாதசுந்தரம் அவர்களுடன் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். க. கணேஸ்வரராஜா உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுவிடயம் தொடர்பான சந்திப்பு ஒன்று சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளருக்கும் யாழ். அரச அதிபருக்கும் இடையில் கடந்தமாதம் 30ம் திகதி இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

### இலங்கையில்

# யுத்த அழிவுகள் கசந்து விட்டன

# சமாதான காற்று வீசவேண்டும்

## யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யுத்த அழிவு, மரணம் பொருள் அழிவு எல்லாம் போதுமென்றாகி விட்டது. எமது நாட்டில் சமாதானம் வரவேண்டும். இதற்கு எல்லாப் பகுதியினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இலங்கை அரசாங்கம், போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தமதுஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அப்படி வழங்கும் போது சமாதானம் தாமதித்தாலும் நிச்சயமாக வரும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ். பல்கலைக்கழகத்தின் திறந்த வெளியரங்கில் யாழ் பல்கலைக்கழக சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.



யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ஆர்னோல்ட் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றும் போது, மாணவர்கள் இதுவரைகாலமும் தங்களுக்குள்ள பிரச்சினைகளை முன்வைத்து போராட்டம் நடத்தினார்கள். ஆனால் இன்று இந்தப் பிள்ளைகள் ஒரு பொது விஷயத்தில் கருணை கொண்டிருக்கின்றார்கள் என்றநிலை எனக்குத் தெரியவந்தது.

சமாதானத்தைப் பற்றி, இன்று நாடு தழுவிய ரீதியில் எங்களுடைய இனம் சம்பந்தப்பட்ட ரீதியில், சர்வதேச ரீதியில் இன்றைக்குக் கலந்துரையாடல் செய்யப்பட்டு வருகின்றது.

சமதானம் என்பது மிகவும் கஸ்டமான ஒரு விடயம். ஆனால் மிகவும் கொண்டுவர வேண்டிய ஒன்றாகும். நோர்வே நாட்டினுடைய முயற்சியின் காரணமாக இலங்கையில் மாத்திரமல்ல உலகின் பல இடங்களிலும் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த பத்து வருடகாலமாக இஸ்ரேல் பாலஸ்தீன நாடுகளுக்கிடையில் சமாதான முயற்சிகள் தொடக்கப்பட்டன ஆயினும் முழுமையான வெற்றி இன்னமும் அடையவில்லை. ஆனால் தோல்வியும் அடையவில்லை.

இப்பணியில் ஈடுபட்டிருக்கின்ற இருபகுதியினரும் சமாதானத்துக்குத் தங்களை அர்ப்பணித்துப்படிப்படியாக முன்னெடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

இன்றும் சமாதான முயற்சிகள் தொடர்கின்றன. அதேமாதிரித்தான் எங்களுடைய நாட்டிலும் சமாதானத்தை நோக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்படல்வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்கின்ற வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என இந்திய அமைதி ஒப்பந்தத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும்.

எமது இனத்தினுடைய பிரச்சினை தொடர்பாகமாணவர்கள் கரிசனை கொண்டிருக்கின்றார்கள். அது சம்பந்தமாகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேநேரத்தில் போராட்டமும் கல்வியும் கைகோர்த்துச் செல்லவேண்டும், ஒன்று இல்லாமல் மற்றது போனால் இரண்டும் தோல்வியடையும். பல்கலைக்கழக மாணவர்கள் புலமைசார் நடவடிக்கைகளில் ஈடுபடல்வேண்டும்.

இன்று எமது நாட்டில் மிகப் பெரிய அளவில் சமூக விஞ்ஞானிகள் இல்லாமல் இருக்கின்றனர். அறிஞர்கள இல்லை. திட்டமிடலாளர்கள் இல்லை. கட்டட நிபுணர்கள் இல்லை. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஒரு கட்டடக் கலைஞர் இல்லை.

ஆனபடியால் படிப்பும் போராட்டமும் கைகோர்த்துப் போனால் தான் அறிவுசார் உலகில் நாம் போட்டி போடமுடியும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைத்தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைபற்றியும் தமிழர் தாயகம் பற்றியும் வரலாற்று ரீதியாக விரிவாக எடுத்து விளக்கினார். (க-77)

# நிரந்தர நியமனமின்றி கி. அலுவலர்கடமையில்

## தீவுப் பகுதியில் சம்பவம்

(ஊர்காவற்றுறை)

தீவுப் பகுதியில் கடந்த 10 வருடகாலமாக பத்திற்கும் மேற்பட்ட கிராம சேவையாளர்கள் தற்காலிகமாக கடமையாற்றி வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிது.

தீவுப்பகுதியில் இடம்பெயர்வு காலத்திலிருந்து சேவையாற்றி வரும் இவர்கள் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்று புகார்தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ள போதிலும் உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையாம். (க-75)

# கடற்படையிடம் சிக்கிய 12 தமிழர்

(கொழும்பு)

பேசாலைக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் நேற்றையதினம் காலை, 12 தமிழ் பொதுமக்களைகைதுசெய்ததுடன் அவர்கள்பயணம்செய்த வள்ளத்தினையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

இவர்களில் 4 குழந்தைகளும் உள்ளடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணையின் பொருட்டு இவர்கள் அனைவரும் மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி 12 பொதுமக்கள் பற்றிய பெயர் விபரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை

இதேசமயம், மன்னாரில் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்ட தொளாயிரம் லீற்றர் எரிபொருளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது (உ)

# ஆறுபேர் கொண்ட குழு பொலிஸாரால் கைது

## புலிகளுடனும் தொடர்பாம்

(கொழும்பு)

பனிப்பிட்டிய பொலிஸார், பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 6 பேர் கொண்ட குழுவொன்றினை கைது செய்துள்ளனர்.

இக்குழுவுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானில் விசேட பரசூட் பயிற்சி பெற்றவரான இராணுவத்தில் இருந்து வெளியேறிய ஒருவர் இக் குழுவின் தலைவரென இனம் காணப்பட்டுள்ளார்.

இவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பனிப்பிட்டிய பகுதியில் ஆயுதங்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி நபர்கள் தொடர்பான மேல் விசாரணைகள் தொடர்ந்தும் நடை பெற்று வருவதாக அறியமுடிகிறது. (உ)

### ஜீ.ரி.சற் நிறுவனம்,

# பயன் மிகு திட்டங்கள் பலவற்றை பாடசாலைகளில் முன்னெடுப்பு

(தென்மராட்சி)

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் (ஜீ ரீ.சற்) யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வருடம், யுத்தத்தினால் சேதமடைந்த 24 பாடசாலைகளை 54 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்துள்ளது.

முதலாம் கட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள 8 பாடசாலைகள் 24 மில்லியன் ரூபா செலவில், இரண்டாம் கட்டத்தில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தீவுப்பகுதி மற்றும் தென்மராட்சி வலயங்களில் உள்ள 16 பாடசாலைகள் 30 மில்லியன் ரூபாவில் புனரமைப்புச் செய்யப்பட்டன.

அத்துடன் குடாநாட்டிலுள்ள 150 பாடசாலைகளுக்கு மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஜேர்மன் தொழில் நுட்பநிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 42 பாடசாலைகளுக்கும் வலிகாமம் பகுதியில் இருக்கின்ற 33 பாடசாலைகளுக்கும். வடமராட்சியில் 26 பாடசாலைகளுக்கும், தீவுப்பகுதியில் 22 பாடசாலைகளுக்கும், தென்மராட்சியில் 27 பாடசாலைகளுக்கும் 45 மில்லியன் ரூபா செலவில் மலசலகூடங்கள அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், புனரமைப்புச் செய்யப்பட்ட 24 பாடசாலைகளுக்கும் 9 மில்லியன் ரூபா செலவில் தளபாடங்களும் வழங்கப்பட்டன. மேலும் மூன்றாம் கட்ட வேலைத்திட்டத்தில் 6பிரதேச செயலர் பிரிவிலுள்ள 23 பாடசாலைகளுக்கு தளபாடங்கள்வழங்கவும் 80பாடசாலைகளில் மலசலகூடங்கள் அமைக்கவும் திட்டமிட்டுள்ளதாக நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் ஒன்பது பிரதேச செயலர் பிரிவுகளில் மொத்தமாக 769 வீடுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டுக்கும்ஒரு லட்சத்து 7ஆயிரத்து 500 வீதம்புனரமைப்புபணி செலவு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாவட்டத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வைத் தொடர்ந்து அமைக்கப் பட்ட இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் 35 முகாம்களில் மொத்தமாக நாளாந்தம் 37 ஆயிரம் லீற்றர் குடிநீரையும் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் இந்நிறுவனம் வடமராட்சியிலுள்ள கப்புதூ கிராமத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்குமுற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு 9 மில்லியன் ரூபா செலவில் கிராமிய குடிநீர் விநியோகத் திட்டமொன்றினை அமுல் செய்துள்ளது.

அதேவேளை யாழ்ப்பாண மாநகர சபையுடன் இணைந்து பாரிய குடிநீர் வழங்கும்திட்டத்தினை அமுல் செய்து வருவதும் இத்திட்டத்தினை அமுல் செய்வதற்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் பலகோடி ரூபாய்களைச் செலவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

### வாய் வார்த்தைகளின்றி

# அங்க அசைவுகளால் கருத்தை புரிய வைக்கும் பரதக்கலை

(புலோலி)

வாய் வார்த்தைகளின்றி உடல் அசைவுகளால் பார்ப்பவர் இதயங்களை முகஅங்க பாவனைகளால் ஈர்க்கின்ற இனிய பரதக்கலையை உலகிற்குதெளிவுபடுத்திக் காட்டவிருக்கும் செல்வி கீர்த்திகா சுப்பிரமணியம் எதிர்காலத்தில்புகழ் படைத்த ஆடலரசியாக திகழவேண்டும்.

திருமலை இராஜரட்ணம் நடனாலயமாணவியும், நாட்டிய கலைமணி திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரனின் மாணவியான செல்வி கீர்த்திகா சுப்பிரமணியத்தின் பரதநாட்டிய அரங்கேற்றத்தை ஒட்டி வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி விடுத்த ஆசிச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; மனிதனுடைய பண்புகளைப் புலப்படுத்தும் கலைகளுள் நடனக்கலை முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இவ் உன்னத முயற்சியிலே இவர் தன்னையும் இணைத்துள்ளார்.

மக்களைப் பரவசப்படுத்தும் பரதநாட்டியக் கலையை அரங்கேற்றுவதுடன் நின்றுவிடாமல் மேலும் டயின்று பரதக்கலையினில் மேலும் விசுவாசம் செலுத்தி அர்த்தமுள்ள செயற்பாடுகளாக நடைமுறைப்படுத்தி மேலும் மேலும் பல வெற்றிகளைச் சந்திக்க எல்லாம் வல்ல இறைவன் செல்விகீர்த்திகா சுப்பிரமணியத்திற்கு அருள் பாலிக்க வேண்டும் என்றார். (க-52)

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

(செம்பியன்பற்று)

பலாலி ஆசிரியர் கலாசாலையின் முதலாண்டு ஆசிரிய மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன்விபரம் கலாசாலையின் விளம்பரப் பலகையில் ஆசிரிய மாணவர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. (உ-42)

## இசை நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்ற வளர்ச்சி நிதிக்கான இசை நிகழ்ச்சியொன்று எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப 3 மணிக்கு மனிப்பாய் மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (உ-24)

## தெருநாய் புதைப்பு

(ஈச்சமோட்டை)

சில நாட்களாக வீதியில் இறந்து கிடந்த தெரு நாய் ஒன்று யாழ் பொது சுகாதார பொறியியல் பிரிவுப் பொறுப்பதிகாரி ஜீவரட்ணத்தின் தலையீட்டினை அடுத்து உடனகற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் கண்டி வீதியும் பழைய பூங்கா வீதியும் இணையும் இடத்திற்கு அண்மையில், இறந்த நாய் ஒன்று. சுகாதாரத்திற்கும் பெரும் கேடு விளைவிக்கும் வகையில் சில நாட்களாக காணப்பட்டது.

இது குறித்து யாழ். பொது சுகாதார பொறியியல் பிரிவுப் பொறுப்பதிகாரியின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட போது, அவரது நேரடிக் கண்காணிப்பின் கீழ் உடனடியாகவே அது அகற்றப்பட்டு புதைக்கப்பட்டது. (உ-59)

# செய்தித் துளிகள்

## தொடர் மின்வெட்டு

(செம்பியன்பற்று)

வடமராட்சிப் பகுதியின் பல பாகங்களிலும் தொடர்ச்சியான மின்வெட்டு இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மின் பாவனையாளர் பலருக்கு இன்னமும் மின்மானி பொருத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-42)

## திரிபோஷா வழங்கல்

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட தாய்சேய் சிகிச்சை நிலையங்களில் திரிபோஷா வழங்கப்பட்டுவருகிறது

கர்ப்பிணிகள் குழந்தைகள் நிறை எடுக்கப்பட்டு அவர்களுக்கு தலா இரண்டு என்ற வீதத்தில் திரிபோஷா வழங்கப்பட்டுவருகிறது.

(உ-23)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவினால் நடத்தப்படும் 2001 ஆம் ஆண்டுக்கான தையல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இன்று 31ஆம் திகதியாகும் மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பப்படிவங்களைப்பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

## புத்தாண்டு திருப்பலி

(ஈச்சமோட்டை)

பிறக்கும் புத்தாண்டில் யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை முதல் திருப்பலிப் பூசையை யாழ். மரியாள் பேராலயத்தில் நாளை காலை ஒப்புக்கொடுப்பார்.

காலை 7 00மணிக்கு ஆயர் தலைமையில் இப்பூசை நடைபெறும். இதில் ஏறத்தாழ நாலாயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இரண்டாம் திருப்பலி காலை 8.00 மணிக்கு பங்குத் தந்தை அருட்திரு. கிறிஸ்ரோபர் அடிகளார் தலைமையில் இடம் பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-59)

## கொழும்பு ஒளி பரப்புகள் தெளிவில்லை

[யாழ்ப்பாணம்]

கொழும்பில் இருந்து ஒளி பரப்பாகும் அலை வரிசைகள் பல யாழப்பாணத்தில் தெளிவற்றிருப்பதாக தொலைக் காட்சிப் பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் சிறந்த கல்வி நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களான திரைப்படங்கள், நாடகங்கள் போன்றவற்றை தொலைக் காட்சியூடாக பார்க்க முடியாதுள்ளது.

இந்நிலை நீண்ட காலமாகவே காணப்படுகின்ற போதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் இது விடயத்தில் அக்கறை காட்டாதிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## டெங்கு விழிப்புணர்வு

(மந்திகை)

பருத்தித்துறைமாவட்டசுகாதாரவைத்தியஅதிகாரிபிரிவில் உள்ள தொண்டமானாறுபகுதியில்டெங்குகாய்சல்தொடர்பான விழிப்புணர்வுக்கருத்தரங்குகளும் சிரமதானங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள்பொது இடங்கள் என்பனவும் மக்களுடன் இணைந்து சுகாதார பரிசோதகர் ந. நிர்மலானந்தம்தலைமையிலான குழுமேற்படி பணியை மேற்கொண்டு வருகிறது. (உ-23)

## காலாவதியான உணவுப் பொருள் அழிப்பு

(செம்பியன்பற்று)

வடமராட்சிப் பகுதி வர்த்தக நிலையங்களில் அண்மையில், சுகாதாரப் பகுதியினர் காலாவதியான உணவுப் பொருட்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(உ-42)

## தந்தையும் மகனும் காயம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் அண்மையில் இடம் பெற்றமோட்டார் சைக்கிள் விபத்தின்போது தந்தையும் மகனும் காயமடைந்து ஊர் காவற்றுறைவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எஸ். கனகரத்தினம் (வயது-37) என்பவரும் அவரது மகனுமே காயமடைந்தவர்களாவர்.

பண்டத்தரிப்பிலிருந்து சுருவில் பகுதிக்கு சென்ற போதே இவ்விபத்து இடம் பெற்றது. (க-75)

## மாணவர்க்கு கற்றல் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

சிதம்பரக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரின் அனுசரணையுடன் இக்கல்லூரியில் கல்வி பயில்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவம் வரும் புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர்செ.யோகச் சந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி சி. புஸ்பலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (உ)

## கலாசாலை இறுதிப் பரீட்சை

(செம்பியன்பற்று)

பலாலி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இறுதியாண்டு ஆசிரிய மாணவர்களிற்கு கல்வி அமைச்சினால் நடத்தப்படும் இறுதிப் பரீட்சை எதிர் வரும் தை மாதம் நாலாம் திகதி முதல் பதினோராம் திகதிவரை நடை பெறவுள்ளது.

இவர்களிற்கான அனுமதி அட்டைகளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சென்ற வாரம் முதல் வழங்கி வருகின்றது.

பலாலி ஆசிரியகலாசாலை மாணவருக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்படுமென கலாசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-42)

# யாழ்ப்பாணத்தில் கைவிடப்பட்ட நிலையில் பனை வெல்லஉற்பத்திநிலையங்கள்

# ஊழியர்கள் திக்கற்ற நிலையில்

(தென்மராட்சி)

பனை வெல்லத்திற்கு குடாநாட்டிலும் தென் பகுதியிலும் கூடவே வெளி நாடுகளிலும் நல்ல கிராக்கி இருந்து வருகின்ற போதிலும், யாழ். மாவட்டத்திலுள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பனை வெல்ல உற்பத்தித் திட்டத்தில் போதிய அக்கறையும் ஆர்வமும் காட்டாதிருந்து வருவது பற்றி அபிவிருத்தி நோக்கர்கள் பெரிதும் கவலைவெளிப்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனை வெல்ல உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அரசின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இருந்து கோடிக்கணக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 71 பனை வெல்லத் தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இத் தொழிலகங்களை நிர்வகித்து வந்த பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் குடாநாட்டில் நிலவும் யுத்த சூழ்நிலையைக் காரணம் காட்டி கடந்த 5 வருட காலங்களாக இத்தொழிற்சாலைகளை இயக்காதிருந்து வருகின்றன.

இதனால் பனை வெல்ல உற்பத்திக்கு தேவைப்பட்ட பதநீரை உற்பத்தி செய்து வழங்கிய தொழிலாளர்களின் வருமானம் பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

அத்துடன், நிர்மாணிக்கப் பட்ட தொழிலகங்கள் எவ்வித பயன்பாடுகளும் அற்ற நிலையில் வீணாகவே இருப்பதுடன், பல இலட்ச ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பனை வெல்ல உற்பத்திக்கான பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் எவ்வித பாவனையும் இன்றி தேடுவாரற்ற நிலையில் இருந்து ருகின்றன.

இதே சமயம்,பனை வெல்ல உற்பத்தித்திட்டத்தில் பணியாற்றிய நூற்றுக்கணக்கான ஊழியர்கள் மற்றும்தொழில் நுட்பவியலாளர்களும் தமது தொழிலை இழந்த நிலையில் பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-77)

# தைமாத முற்பகுதியில் பாண்டியன்தாழ்வு மக்கள் மீளக் குடியமர ஏற்பாடு

(ஈச்சமோட்டை)

பாண்டியந்தாழ்வ அன்னார் ஆலய கோவிற்பற்று பொதுமக்கள்,தை மாதமளவில் தத்தம் வீடுகளில் மீளக் குடியமர ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்வதென படைத் தரப்பு உறுதியளித்திருப்பதாக தெரியவந்துள்ளது.

மேற்படி பகுதியைச் சேர்ந்த சுமார் 15 குடும்பங்கள் ஒன்றிணைந்து, தாம் மீளக்குடியமர ஏற்ற நிலைமைகளை ஏற்படுத்தித்தருமாறு சம்பந்கப்பட்ட பகுதி இராணுவ பொறுப்பதிகாரியிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதில்,தமது வீடுகள் பலவற்றில் இராணுவ நிலைகள் இருப்பதாலும், அதை அண்மித்த பகுதிகளில் பெருமளவு இராணுவ நடமாட்டம் இருப்பதாலும் தமது சொந்த வீடுகளில்வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும்,

இந்நிலையினைப் போக்கி சொந்த வீடுகளில் வசிப்பதற்கேற்ற நிலையை ஏற்படுத்தி உதவ வேண்டும் எனவும் கோரப்பட்டிருந்தது.

பொது மக்களின் மேற்படி கோரிக்கையை அடுத்தே, விரைவில் சாதகமான பதில் அறிவிக்கப்படும் என படைத் தரப்பு உறுதியளித்திருப்பதாக் அறிய முடிகிறது.

கடந்த ஏப்ரல் மாதமளவில் இடம்பெற்ற அனர்த்தத்தையடுத்து பாண்டியன் தழ்வு மக்கள் இடம்பெயர்ந்து வலிமேற்கு போன்ற பகுதிகளில் தங்கியுள்ளமை ஏற்கனவே தெரிந்ததே. (உ-59)

# இராசி பலன்

31/12/2000

(மார்கழி 16, ஞாயிறு)

பஞ்சமி மு ப 9.04 வரை

சதயம் பி.ப 5.16 வரை

ராகுகாலம் 4.59 - 6.29

சுபநேரம் 9.29 - 10. 59

சித்தம், விநாயக சஷ்டி விரதம்

திருவெம்பாவை ஆரம்பம்

**மேடம்**
சந்தோசமான நிகழ்வு, கீர்த்தி, காரிய ஜெயம், தன லாபம்.

**இடபம்**
முயற்சிபலிதம், தொழில் விருத்தி, பணியாளர் உதவி, அதிகாரம்.

**மிதுனம்**
மனப்பயம், வயிற்றுக் கோளாறு. உடல் உழைப்பு, பிரயாணம்.

**கடகம்**
வியாதி, உறவினர் வெறுப்பு, பிரயாணபயம், அரச நன்மை.

**சிங்கம்**
பிரயாணம்,போசன சுகம், களஸ்திர சுகம், காரியம் கைகூடும்.

**கன்னி**
சுகவாழ்வு,சத்துரு ஜெயம், சந்தோசம், முயற்சி பலிதம்.

**துலாம்**
காரியநன்மை, வியாதி, குடும்பக் கவலை, பிரயாணத் தடங்கல்.

**விருச்சிகம்**
உறவினர் வெறுப்பு, பயந்த சுபாவம், காரியதாமதம்.

**தனுசு**
உஷ்ண ரோகம், பிரயாணம்,தனவரவு, இனிய சம்பவம்.

**மகரம்**
பொருள் விரயம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு, விவாதம்.

**கும்பம்**
சயனசுகம், புதிய பொருள் சேர்க்கை, காரியஜெயம், செல்வாக்கு.

**மீனம்**
காரிய அலைச்சல், பிரயாணம், பிதாசிந்தை, உணர்ச்சி வசப்படல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# யாழ். சென்ஜேம்ஸ் பழைய மாணவர்களால் பிரான்ஸில் ஒளிவிழா

(சுண்டுக்குளி)

யாழ்.சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் யூபிலி ஆண்டு ஒளிவிழா நிகழ்வு அண்மையில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில்இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அங்கு வாழும் தமிழ் மக்கள், குறிப்பாக குருநகர் வாசிகள் பலரும் கலந்துகொண்டதோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மேற்படி ஒளி விழாவுக்கு யா/சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழகத்தால், வாழ்த்துச் செய்தி அனுப்பிவைக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-110)

## உள்ளமெலாம் உனக்குள்

சின்னப் பறவை போல நீ திரிந்த நாளை
எண்ணிப் பார்க்க எனக்கும் கொள்ள ஆசை
இன்று வண்ணப் பறவையாக வலம் வருமுன்னை
எண்ண எண்ண கொள்ளை இன்பம் என் உள்ளே

உலகம் முழுக்க உனக்குள் அடங்கும் என்
உள்ளமெல்லாம் உனக்குள் மயங்கும்
உறுதி மிக்க உடலாம் உன் தேகம்
அதில் வரும் நாதமோ வெகு வேகம்

மு. கிருஸ்ணன்

மட்டுவில்.

# வடமராட்சியில் தேங்காய் விலை பெருமளவில் சரிவு

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சிப்பகுதியில் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வறணி, மாசேரி,இடைக் குறிச்சி போன்ற இடங்களிலிருந்து தேங்காய்கள் பெருமளவில் வந்து சேர்வதாலேயே இவ்விலைக் குறைப்பு ஏற்பட்டதாக அப்பகுதிமக்கள் தெரிவித்துள்ளனர்.

கோவில்சந்தை, அம்பன் போன்ற பகுதிகளிலேயே தேங்காயின்விலை குறைந்துள்ளதாகவும், ஒரு தேங்காய் 10 ரூபாவரையில் விற்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-43ரி)

## இன்று ஒரு தகவல்

# யாரை முட்டாள் என்பது?

ஓர் அரசன் இருந்தான் அந்த அரசனின் வேலையாள் இருந்தானே அவன் ஒரு விந்தையான பேர்வழி. அரசன் அவனிடம் எந்த வேலையைச் சொன்னாலும் அவன் உடனே அந்த வேலையை எதிர்ப்பு ஏதும் சொல்லாமல் செய்வதே இல்லை. ஏதாவது அனாவசியச் சந்தேகங்களை எழுப்பி அரசனைக்குழப்புவது அவன் வழக்கம்.

உதாரணமாக வெளியூரிலிருக்கும் ஒரு மனிதரிடம் ஏதாவது காரியமாக அரசன் போய் வரச் சொன்னால் போதும்; உடனே அந்த வேலையாள், ''அவர் அங்கே இல்லாவிட்டால் என்ன செய்வது? வெளியூர் சென்றிருந்தால் நான் தங்கிப் பார்த்து வருவதா? எத்தனை நாள் தங்குவது'' போன்ற சந்தேகங்களை எழுப்புவான். அரசன் குழம்பத் தொடங்குவான் இதனால் அரசனுக்கு இந்த வேலையாள் மீது அடிக்கடி கோபம் உண்டாகும். அவனை வேலையை விட்டு நீக்கி விடலாமா என்று கூட எரிச்சல் உண்டாகும். ஆனால் அவனுடைய நேர்மையான குணம், உண்மையான உழைப்பு ஞாபகத்திற்கு வந்ததும் நீக்குவதற்கு மனமில்லாமல் கோபத்தை அடக்கிக் கொள்வான் அரசன்.

அவனை எப்படியாவது திருத்தவேண்டும் என்ற எண்ணம் அரசனுக்கு உண்டாயிற்று. அரசன் யோசனை செய்து அந்த வேலையாளின் கழுத்தில் 'இவன் ஒரு முட்டாள்' என்ற அட்டையைத் தொங்க விடும்படி உத்தரவிட்டான். அப்படியாவது அவன் திருந்துவான் என்று அரசன் நினைத்தான். ஆனால் அவ்விதம் செய்தும் வேலையாளின் குணத்தை மாற்றவே முடியவில்லை. அட்டையும் கழுத்தில் தொங்கியபடியே காலம் சென்றது.

அரசனுக்கு வயதும் கூடியது நோய் வாய்ப்பட்டான். படுத்த படுக்கையாகி இனிப் பிழைக்கமாட்டோம் என்ற நிலையை அடைந்து விட்டான். வைத்தியமும் பலனளிக்கவில்லை. மந்திரிகள், தளபதிகள் ஆகியோர் ஒவ்வொருவராக வந்து பார்த்து அரசனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு சென்றனர்.

வேலையாளும் அரசனைப் பார்க்கவந்தான். அரசன் அவனிடம் ''நான் இனிப் பிழைக்கமாட்டேன் சாகப் போகிறேன்'' என்று வருத்தத்துடன் கூறினான்.

வேலையாள்; ''சாதல் என்றால் என்ன?'' என்றான்.

அரசன்: ''தெரியாத ஊருக்குப்போதல்'' என்றான்

வேலையாள்; ''எந்த வழியில் போக வேண்டும்? எத்தனை தூரம்?'' என்றான் அரசன் ''தெரியாது'' என்றான். வேலையாள் ''தேரில் போகலாம் அல்லவா? என்றான். அரசன் ''தேர் போகாது'' என்றான், வேலையாள், ''குதிரைமேல் போகலாமா?'' என்றான். அரசன் ''குதிரையும் போகாது'' என்றான். வேலையாள், ''வண்டி அல்லது பல்லக்கு'' என்றான். அரசன் ''எதுவுமே போகாது'' என்றான்.

''அரசே! தாங்கள் ஊருக்குப் போவதாகச் சொல்கிறீர்கள், எந்தவழி, எவ்வளவு தூரம், எந்த ஊர் என்பது தெரியவில்லை என்கிறீர்கள் குதிரை போன்ற வாகனங்களும் செல்லாது என்கிறீர்கள் ஆனால் அந்த ஊருக்குப் போவது மட்டும் நிச்சயம் என்கிறீர்கள். ஊர் தெரியும் வழி தெரியாது என்கிற நீங்கள் தான், இந்த அட்டைக்கு மிகவும் பொருத்தமானவர்'' என்று அட்டையைக் கழற்றி அரசன் கழுத்தில் மாட்டி விட்டுச் சென்றான் அந்த வேலையாள்.

நன்றி
தெய்வீகக்கதைகள்

# இல. உல்லாச பயணத்துறையை பாதித்த பண்டாரவளை கொலை

## உயர் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பண்டாரவளைபிந்துனுவெவ புனர்வாழ்வு தடுப்பு முகாம் படுகொலை நிகழ்வானது இலங்கையின் உல்லாசப் பயணத்துறை வருமானத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக உயர் வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; மேற்படி சம்பவத்தையடுத்து ஐரோப்பிய நாடுகளில் அரசிற்கு எதிரான சக்திகளால்பரப்பப்படும்பிரச்சாரம் உக்கிரமடைந்துள்ளதாகவும் இதனால் வெளிநாட்டவர் பலர் இலங்கைக்கு வருவதற்கு பெரிதும் அச்சம் கொண்டிருப்பதாகவும் மேலும் அறியப்படுகிறது.

இதேவேளையில் மேற்படி பாதகமான நிலையை சீர் செய்யும் முயற்சிகள் அரசு தரப்பினரால் மிகவேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

இப்படுகொலை சம்பவத்தின்போது வடக்கு - கிழக்கு பகுதிகளை சேர்ந்த பலரது சடலங்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டதும் அச்செய்கையானது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த அதிருப்தியை தோற்றுவித்தமையும் ஏற்கனவே தெரிந்ததே.

(க)

## காலிப் பகுதியில்

# மூழ்கிய கப்பல்கள் விரைவில் மீட்கப்படும்

## உயர் மட்டம் தகவல்

(காலி)

காலித் துறைமுகப் பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூழ்கிய வெளிநாட்டு. மற்றும் உள் நாட்டு கப்பல்களை மீட்கும் நடவடிக்கைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அரச உயர்மட்டத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடற்றொழில் கப்பல் போக்குவரத்து அமைச்சு இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இப்பணிக்கு அவுஸ்திரேலிய கடல் ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உதவி நாடப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

மீட்கப்படும் கப்பல்கள் பொதுமக்களின் நன்மை கருதி கொழும்பு நூதன சாலையில் வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நடவடிக்கை மூலம் உல்லாசப்பயணிகளைகவரும் வாய்ப்பு ஏற்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(க-59)

## பாட மேம்பாட்டு செயற்றிட்டம்

தீவக கல்வி வலயத்தின் பூரண அனுசரணையுடன் அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் அதிபர் த. மாதவனின் வழிகாட்டல் ஆலோசனையுடன், ஆசிரியர்களால் இரண்டாயிரமாம் கல்வி ஆண்டுக்கான பாட மேம்பாட்டுச் செயற்பாடுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இச்செயற்பாட்டுத் திட்டத்தின்போது, களப்பயணங்கள், சஞ்சிகை வெளியீடு, போட்டி நிகழ்ச்சிகள், ஆக்கச் செயற்பாடுகள் என்பன இடம்பெற்றன.

இதேபோன்று, புதிய வருடத்திலும் முன்னெடுத்துச் செல்லப்படுமென அதிபர் மாதவன் தெரிவித்துள்ளார்.

(உ)

# வண்டில்களில் குடிநீர் விற்பனையாகிறதாம்

## ஒரு லீற்றர் 2.00 ரூபா

(திருமலை)

குடி தண்ணீர் வண்டில்களிலும், வேறு கொள்கலன்களிலும் கொண்டு சென்று வீடு வீடாக விற்கப்படும் சம்பவங்கள் திருமலை நகரில் தற்போது வெகுவாக அதிகரித்து வருகின்றதாம்.

ஒரு லீற்றர் குடிதண்ணீர் 2 ரூபாவாக விற்கப்படுவதாகவும் பொது மக்கள் வேறு வழியின்றி குடிதண்ணீரை விலைக்குப் பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது

தொடர்ச்சியாக பெய்த மழை, மின்சார துண்டிப்பு போன்ற இன்னோரன்ன காரணிகளால் குடிதண்ணீருக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-59)

# இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு மற்றும்ஏனைய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துமுகாம்களில் வசிக்கும் மக்களின் தற்காலிகப் பிரச்சினைகள் உடன் தீர்க்கப்படுமென வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா இடம்பெயர்ந்த மக்களின் முகாம்பிரதிநிதிகளுக்கு உறுதியளித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மேற்படி பிரதிநிதிகள் அமைச்சருடன் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தங்கியுள்ள முகாம் காணிகள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டதுடன் அக்காணியின் உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு காணிகளை அம்மக்களுக்கு நிரந்தரமாகப் பெற்றுக் கொடுப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் இடம்பெயர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தமக்கு சுயதொழிலிற்கான உதவித் திட்டங்களை செய்து தருமாறு கோரிக்கை விடுத்ததுடன்மழையினால்முகாம்களில் எதிர்நோக்கப்படும் பல்வேறு நெருக்கடி குறித்தும் விபரித்தனர்.

இக்கலந்துரையாடலில் தற்போது முகாம்களில் தங்கியுள்ள அரச உத்தியோகத்தர் தமது தேவைகளுக்கு திணைக்களங்களில்கடன்எடுக்கமுடியுமென்று தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் மற்றும் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், தெல்லிப்பளை, உடுவில் பிரதேச செயலர்களும், கிராம சேவகர்களும் உடனிருந்தனர்.

(க-3)

# கவனிப்பாரற்ற நிலையில் வண். முருகமூர்த்தி வீதி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதி கடந்த நாற்பதாண்டு காலமாக செப்பனிடப்படாமல் அப்பகுதி மக்களுக்கு மிகுந்த சிரமமளிப்பதாக இருந்து வருகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு பலமுறை சுட்டிக்காட்டிய போதிலும், எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என. பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மாநகர சபையின் குப்பை கூழங்களை அகற்றும் வாகனங்கள் இவ் வீதி வழியாகச் சென்றே பட்டுவெளி வயல் பிரதேசத்தில் குப்பை கூழங்களை கொட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இவ் வீதியை விட சிறிய ஒழுங்கைகள் பல திருத்தம் செய்யப்பட்டு வருவது குறித்து ''செல்வாக்கு கலாசாரம்'' வீதி திருத்தலிலும் ஆதிக்கம் செலுத்துகிறதா என பாதிக்கப்பட்ட பொது மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

(உ)

# படைக்கு ஆட்சேர்க்க புதிய நடைமுறையாம்

(கொழும்பு)

இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்குப் புதிய முறை ஒன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

18 மாதங்களுக்குள் சுமார் 15 ஆயிரம் பேரைபடைக்குச் சேர்க்கும் திட்டம் ஆறுதடவைகளில் தோல்வி அடைந்ததை அடுத்தே இப்புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

படைக்கு ஆள்சேர்க்கும் புதியதிட்டத்தின்படி முதல் மூன்று வருடங்களுக்கு தொண்டு அடிப்படையில் சேர்த்துக் கொள்வதென்றும் மூன்று வருடங்கள் சேவையாற்றிய பின் சுயமாகவே விலகிக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள இராணுவச்சட்டங்களின்படி 12 வருடத்தில் ஒருவர் இராணுவத்தில் சேவையாற்ற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பணம் கேட்டு ரகளை புரிந்த நபர் பொலிஸில் ஒப்படைப்பு

## கோப்பாயில் சம்பவம்

(கோப்பாய்)

கோப்பாய் சந்தியில் உள்ள பேக்கரி ஒன்றிலும், மானிப்பாய் வீதியிலுள்ள தனியார் கடையிலும் பணம் கேட்டு ரகளை புரிந்த தான்தோன்றித் தனமான நபர் ஒருவரை பொதுமக்கள், மடக்கிப் பிடித்து கோப்பாய் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி நபர், கோப்பாய் பகுதி பேக்கரியில் உள்ளவர்களை பணம் தருமாறுமிரட்டி அங்கிருந்த அலுமாரியின் கண்ணாடிகளை உடைத்ததாகவும், பின் வேறு கடை ஒன்றிற்கு சென்று தான் மது அருந்த பணம்தராவிட்டால், தனது கையைதானே வெட்டி விட்டு கடை உரிமையாளர் மீது பழி சுமத்தப்போவதாக ''பிளேற்'' ஒன்றைக் காட்டி மிரட்டி பணம்பெற்றுக் கொண்டதாகவும் தெரிய வந்துள்ளது.

அடாவடித்தனங்களை தாங்கமாட்டாதவர்களாய், மடக்கிப்பிடிக்க முயன்ற வேளை, அருகில் இருந்த கல்லில் தலையை மோதி, மற்றவர்கள் மேல் பழி சுமத்த எண்ணியபோதிலும் ஒருவாறு மடக்கிப் பிடிக்கப்பட்டார் எனவும் தெரியவந்துள்ளது.

இந்நபர், பல தடவைகள் சிறைச்சாலை வாசம் புரிந்தவர் என்பது பூர்வாங்க விசாரணையினின்றும் அறியமுடிகிறது.

இது இவ்வாறிருக்க, இவருடன் சேர்ந்து வேறும் சிலர் இந்தகைய அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறித்தும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-79)

# நடந்துவந்த ஆண்டில் உலகில் நடந்தவை

உலக தரிசனம்

## ஜனவரி

★ ரஷ்ய அதிபர் பொறிஸ் ஜெல்ஸின் பதவி விலகினார்.
★ இந்தோனேஷிய மதக்கலவரத்தில் 43 பேர் பலியாகினர்.
★ ரஷ்ய யாப்பை மீறும் எந்தச் செயலும்நிராகரிக்கப்படும்.
★ இந்தியாவில் நிலவும் கடும் குளிரில் 300 பேர் இறந்துவிட்டனர்.
★ கார்க்கின் எல்லையில் 25 பாகிஸ்தான் படை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## பெப்ரவரி

★ வட அயர்லாந்தில் சட்ட சபை கலைக்கப்பட்டது.
★ அமெரிக்க தென்மேற்கு மாகாணமொன்றில் கோரப் புயல் 22 பேரைப் பலிகொண்டது.
★ மொசம்பிக்கில் 3 இலட்சம் பேர் வீடிழந்தனர்
★ நேபாள அமைச்சர்கள் 11 பேர் திடீர் இராஜினாமாச் செய்தனர்
★ செல்வி ஜெயலலிதாவிற்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## மார்ச்

★ பாகிஸ்தானில் அரசுக்கு எதிராக வேலை நிறுத்தம் 8 வாகனங்கள் தீக்கிரை 200 பேர் கைது.
★ புதிய உலகைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் அல்ல ரோம் வாசியே.
★ சர்வதேச நீதிமன்றத்தின் முன்பன்னாட்டு இராணுவ அதிகாரிகள் விசாரிக்கப்படுவார்கள்
★ பங்களாதேஷ் பரீட்சை மண்டபத்தில் நெருக்குண்டு ஐந்து பேர் பலியாயினர்.
★ 200க்கு மேற்பட்ட இலங்கையர் லெபனான் சிறைகளில் பரிதவித்தனர்.
★ கர்நாடகாவில் தீண்டாமைக் கொடுமையால் எட்டுப் பேர் கொலை.
★ ஜப்பானின் பொருளாதாரம் மந்த நிலையில் இருக்கிறது
★ அமெரிக்க அதிபரின் இந்தியப் பயணம் அரசியல் நோக்கம் கொண்டதே.
★ எந்நிர்ப்பந்தத்திற்கும் இந்தியா அடி பணியாது பிரதமர் வாஜ்பாய்.
★ தாயவானின் ஜனநாயக அரசு சீனாவிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.
★ இந்தியாவில் இலட்சப் பேருக்கு இணைய இணைப்பு ஆனால் பெரும் பாலோருக்கு தண்ணீர் இல்லை.
★ வருடந் தோறும் 2 மில்லியன் பேர் உலகில் காச நோய்க்குப் பலியாகின்றனர்.
★ தாய்வான் சட்டசபை கலைக்கப்பட்டது.

## ஏப்ரல்

★ வடசீனாவில் திருமண வீட்டில் மன நோயாளி நடத்திய வெறியாட்டத்தில் 36 பேர் பலியாகினர்.
★ 9 ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டின் தமிழகத்தில் கண்டுபிடிப்பு.
★ ஈழத் தமிழர் கோரிக்கையை உலக நாடுகள் விரைவில் அங்கீகரிக்கும் வை. கோ. கூறிகிறார்.
★ புகைத்தலை மறக்க உறிஞ்சுங் குழல்கள், டாக்டரின் ஆலோசனையுடன் பாவிப்புக்கு வருகிறது.
★ தென்னாபிரிக்க கிரிக்கெட் தலைவர் 4 இலட்சம் டொலர் லஞ்சம் பெற்றார்
★ 15 கோடி டொலர் நோட்டுகள் சிவகாசியில் அச்சடித்துப் புழக்கத்திலிருக்கின்றன.
★ உலகில் தினமும் பஞ்சம் பட்டினியால் 84 கோடி மக்கள் வாடுகிறார்கள்.
★ கென்யாவில் கோர வீதி விபத்து 70 பேர் மாண்டனர்.
★ புதுவையில் ஜானகிராமன் தலைமையிலான அரசாங்கம் இராஜினாமாச் செய்தது.
★ தமிழ் நாட்டில் தமிழில் போதிக்க அரசு உத்தரவு, நீதிமன்றம் அதனை ரத்து செய்தது.
★ மத சீர் திருத்தத்தை வலியுறுத்திய பத்திரிகைகள் ஈரானில் தடை செய்யப்பட்டன
★ 50 மில்லியன் பெண் குழந்தைகள் பாடசாலை செல்வில்லை என கோபிஅனான் தெரிவித்தார்.

## மே

★ செல்வி ஜெயலலிதாவிற்கு லண்டனிலிருந்து மூன்று இலட்சம் டொலர் அனுப்பியவர்யார்? விசாரணை தொடர்கிறது.
★ இந்தியாவில் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஆயுதக் கிடங்கில் தீ மூண்டது.
★ புலிகளிடம் இந்திய இராஜதந்திரம் தோல்வியுற்ற உண்மையை யாரும் மறக்கமுடியாது - தமிழ் தேசியக் கட்சி.
★ ஈரானிலிருந்து விடுதலையான 480 ஈராக்கிய கைதிகள் உறவினரை இனங்காணத்தடித்தனர்.
★ மொழிப் பிரச்சினையை வைத்து கமரூணை பிளவுபடுத்தாதீர்-

## ஜூன்

★ இந்தியா இரசணுவரீதியில் இலங்கைக்கு உதவமாட்டாது.
★ தமிழர் மீது அவதூறு ஏற்படுத்திய நஷனல் போஸ்ற் பத்திரிகைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
★ ஆஜன்ரீனா பத்திரிகையாளர் 86 வயதில் பட்டம் பெற்றார்.
★ பீஹாரில் 33 இந்துக்கள் துடிதுடிக்கப் பலியாகினர்.
★ பிஜியில் பிடித்துவைக்கப்பட்டுள்ள பிரதமர் சௌத்திரியை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுகோள்.

## ஜூலை

★ மலேசிய ராணுவ முகாமுக்குள் புகுந்த கோஷ்டி பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றியது.
★ நைஜீரிய எரிபொருள் குழாய் தீவிபத்தில் 250 பேர் உடல் கருகிமாண்டனர்.
★ சொலமன் தீவில் தொடரும் குழுமோதல்.
★ சிங்கப்பூரில் 20 நிமிடத்தில் வாசிக்கக்கூடிய பத்திரிகை வரவிருக்கிறது
★ புகைத்தலால் பாதிப்புற்றோருக்கு நட்ட ஈடு வழங்குமாறு புகையிலைக் கம்பனிகளுக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
★ அமெரிக்க காம்டேவிட் இல்லத்தில் இஸ்ரேல் பாலஸ்தீனம் அமெரிக்கா ஆகியன பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன.
★ இந்திய இறையாண்மையின் கீழ் மாநில சுயாட்சி வேண்டும். முதல்வர் மு. கருணா நிதி.
★ பங்களாதேஷ் பிரதமர் மீதான கொலை முயற்சி முறியடிப்பு.
★ பிரான்ஸ் தலை நகரில் விமான விபத்து 113 பேர் துடிதுடித்து இறந்தனர்.
★ பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற 3000 தீவிரவாதிகள் ஜம்மு காஷ்மீருக்குள் ஊடுருவல்
★ பெரு நாட்டின் அதிபராக புஜிமோரி பதவி ஏற்பு.

## ஆகஸ்ட்

★ கன்னட நடிகர் ராஜ்குமார் உறவினருடன் வீரப்பனால் கடத்தப்பட்டார்.
★ கனடா சென்ற ஆயுதக் கப்பல் இனந்தெரியாதோரால் கடத்தல்.
★ கடற்கொள்ளையர் 20 பேர் சீனப்படையினரால் கைது.
★ சந்தனக் கடத்தல் வீரப்பன் விதித்திருக்கும் நிபந்தனைக்கு தமிழ் வாதக்குழுக்கள் காரணமாம்.
★ ரஷ்யாவின் நவீனரக நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கியது.
★ வெனிசுலா நாட்டின் தலைவராக சியூலாட்சசர் தெரிவு செய்யப்பட்டார்.
★ குளோனிங் மனிதரை உருவாக்க பிரிட்டிஷ் அரசு அனுமதி வழங்கியது.
★ மசூதி கட்டிய கிறிஸ்தவ அடிமைக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.
★ முதலீட்டாளர்களைக் கவர்வதில் தமிழ்நாடு முன்னணியில்.
★ எகிப்திய விமான விபத்தில் 143 பேர் பலியாகினர்.
★ மத்தியப் பிரதேசத்தில் கலப்பட உணவினை உட்கொண்டதில் 500 பேர் மாண்டனர்.
★ இனவாத நடவடிக்கைகளை எதிர்த்து அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்.

## செப்டெம்பர்

★ பங்களாதேஷ் புயலில் சிக்கி 60 பேர்படகுடன் மூழ்கினர்.
★ இந்தோனேஷிய அதிபர் அப்துல்ரகுமான் வாஹிட் ஊழல் மோசடியில் சிக்கினார்.
★ லண்டனில் அப்பலோ அரங்கில் ஸ்ரார் லைற் நாடகம் தொடர்ந்து 16 ஆண்டுகளாக நடைபெறுகின்றன.
★ உலக அமைதி நாடி ஐ.நாவின் சர்வமத மகாநாடு நியூயோர்க்கில் நடந்தது.
★ பாகிஸ்தானுக்கு இந்தியச்சர்க்கரை ஏற்றுமதியாகும்.
★ இந்தியாவும பாகிஸ்தானும் விகிதாசார முறையில் படையினரைக் குறைக்க வேண்டும் என பாக் அதிபர் அறிவித்தார்.
★ ஏழை நாடுகளின் கடன்களைத் திருப்பிக்கேட்க வேண்டாமென மனுத்தாக்கல்.
★ அமெரிக்காவிற்கு இந்தியப் பிரதமர் வந்து சேர்ந்தார்.
★ இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு சத்திரசிகிச்சை இடம் பெற்றது.
★ மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் விலையேற்றம்.
★ மேஜர் பாண்டேயின் மனைவி ரயிலிலிருந்து பாய்ந்து தற்கொலை.
★ ஜகார்த்தா குண்டு வெடிப்பில் சுஹாட்டோவின் மகன் கைது.
★ புதுவித சிறுநீரக நோயினால் சவூதியில் 30 பேர் பலி.
★ சர்வதேச நாணயநிதியம் வட்டிவீதத்தை கூட்டிவிட்டது.
★ லண்டன் ஏவுகணையால் உளவுத்துறைத் தலைமையகம் சேதமானது.
★ திருவள்ளுவரையும் சர்வாஞ்சனையும் ஒன்றாகக் கருத முடியாது.
★ மேற்கு வங்கத்தில்பெருவெள்ளம் 700 பேர் பலியாகினர்.

## ஒக்டோபர்

★ இஸ்ரேலியர் பாலஸ்தீனியர் மோதல் 10 சிறுவர்கள் உட்பட 29 பேர் பலியாகினர்
★ அடுத்த வருடத் தைப்பொங்கல்தினத்தில் தமிழ் இணைய பல்கலைக் கழகம்.
★ பழ. நெடுமாறனின் சமாதானத் தூதினால் வீரப்பனிடமிருந்து நடிகர் ராஜ்குமார் விடுதலையானார்.
★ உலக நாடுகளின் சித்திரவதைகளை அனைத்துலக அபய நிறுவனம் கண்டிக்கிறது.
★ நடிகர் ராஜ்குமாரை விடுவித்த வீரப்பன் யாழ்ப்பாணம் வருவாரா?
★ பர்மா நாட்டின் அடிமைத் தொழிலைப் பார்வையிட ஐ.நா வின் பன்னாட்டுக் குழுவினர் விஜயம்செய்தனர்.
★ பாகிஸ்தானுடன் தொடர்புகள் துண்டிக்கப்படும். அமெரிக்க அதிபர் எச்சரிக்கை செய்தார்.
★ அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால் ஆணாகப் பிறக்க விரும்புகிறேன் ஈரானியப் பெண.
★ பாலஸ்தீனரைக் காக்க ஐ.நா படையை அனுப்பும்படி பல நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.
★ நாதஸ்வர வித்துவான் சேதுராமன் காலமானார்.
★ பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேல் பெண்கள் ஊர் வலம் நடத்தினர்.

## நவம்பர்

★ அமெரிக்கா வடகொரியா பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.
★ விசா பெறாமல் அமெரிக்காவிற்கு எவரும் பிரவேசிக்க முடியும்.
★ சிங்கப்பூர் விமானம் தாய்வானில் விபத்துக்குள்ளானதில் 66 பேர் ஸ்தலத்திலே பலியாகினர்.
★ மெக்ஸிக்கோவிற்கு அருகில் எரிமலை வெடிப்பு.
★ பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ரடாவிற்கு எதிராக வழக்குத் தாக்கல்.
★ பொருளாதார நெருக்கடியை அமெரிக்கா எதிர்நோக்குகிறது.
★ இந்தோனேஷிய மதக் கலவரத்தால் இலட்சக் கணக்கானோர் இடம் பெயர்வு.
★ அமெரிக்க தேர்தலில் விறுவிறுப்பான வாக்குப் பதிவு.
★ பரபரப்பை ஏற்படுத்தி வந்த கன்னட நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் விடுவிக்கப்பட்டார்.
★ பிஜியில் இராணுவஆட்சி செல்லுபடியாகாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
★ ஐ நா பாதுகாப்புச்சபையில் அங்கத்துவம் பெற இந்தியாவிற்கு தகுதி உண்டு.
★ கியூபா அதிபரைக் கொலை செய்ய முயன்றவர் கைதுசெய்யப்பட்டார்.
★ சிறந்த வர்த்தக நகரமாகச் சிங்கப்பூர் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
★ சீனாவின் எந்தச் சவாலையும் தாய்வான் ஏற்றுக்கொள்ளும்.

## டிசம்பர்

★ கருணைக் கொலை மசோதா நெதர்லாந்தில் நிறைவேறியது.
★ அமெரிக்கா சிங்கப்பூர் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்தானது.
★ இந்தியா ஒருதலைப்பட்சயுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளது.
★ இந்தியாவில் அஞ்சல் ஊழியர் வேலை நிறுத்தம் நடைபெற்றது
★ முத்தரப்புப் பேச்சுக்கு பாகிஸ்தான் பச்சைக் கொடி காட்டியுள்ளது.
★ பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரிப் நாடு கடத்தப்பட்டார்.
★ யூ. என். எச். சி. ஆர் பொன்விழா காண்கிறது
★ அமெரிக்க ஜனாதிபதியாக ஜோர்ச் டபிள்யு. புஷ்தேர்ந்து எடுக்கப்பட்டார்.
★ நேபாளத்தில் மாணவர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

---

## விசாரணைகள்

பாவிகளை கொலை செய்தவர்களின் சிந்தனையில் இனவாத வெறியே காணப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கபட்டுள்ளது. [க]

பொள்ளென ஆங்கே புறம் வேரார் காலம் பார்த்து உள்வெர்ப்பர் ஒள்ளியவர்
— குறள் —

வலம்புரி

## மெல்ல விலகும் மௌனப்பகை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி அனைத்துலக நாடுகளுக்கு தெளிவு படுத்தும் எழுச்சியை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது. இந் நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் சகல பிரிவுகளும் ஒன்றிணைந்து ஒரே குரலில் தமிழின் · தமிழரின் உரிமையை உரக்க ஒலிக்கச் செய்திருக்கிறது.

இதனால்யுத்தத்தின்சத்தத்தினால்நொருங்குண்ட மனங்கள் ஒருகணம் நிம்மதி மூச்சு விட்டிருப்பார்கள் என்பது திண்ணம்.

கடந்த 20 வருடங்களாக தமிழ் மண்ணில் இடம் பெற்று வரும் யுத்தத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கவேண்டியஅதிசக்திவாய்ந்தயாழ். பல்கலைக்கழகம் அநேக காலங்கள் மௌனமாகவே இருந்தது. அதுமட்டுமன்றி தமிழ்ச் சமூகத்திலிருந்து தாங்கள் வேறுபட்ட ஓர்சமூகம்போலவே கடந்த காலங்களில் நடந்துள்ளது.

ஒரு புறத்தில் மண்மீட்பின் போர் நடக்கும். அங்கே தமிழ் மண்ணின் மீது கொண்ட தணியாத தாகத்தினால் தமிழ்மறவன் வேங்கையாகி தன் குருதியால் இம் மண்ணை நனைத்துக் கொண்டிருப்பான்.

ஆனால்மறுபுறத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களோ தமக்கென்றொரு கலாசாரத்தை உருவாக்கி ஆடலும், பாடலும், ராக்கிங் சேட்டைகளும் என்று தம்பாட்டில் பொழுதைப் போக்குவர்.

இதனால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதுதமிழ்ச்சமூகம்மௌனமான பகையைக் கொண்டிருந்தது. இந் நிலைமை தற்போது அகற்றப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. நாம் வேறு, தமிழ்ச் சமூகம் வேறென்ற மாணவர்களின் மாயைத்திரை மெல்ல அகலுவதையே நேற்று முன்தினம் நடந்த எழுச்சி நிகழ்வு-உரிமைக் குரல் ஒலிப்பு சுட்டி நிற்கிறது.

இவ்வுரிமைக்குரல் இன்னமும் ஓங்கி ஒலித்து உலகில் சகல பாகங்களிலும் எதிரொலிக்கட்டும். அதே நேரம் உரிமைக்குக் குரல் கொடுக்கும் தகுதியை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றுக் கொள்வதும் மிக மிக அவசியமாகும். அதற்கு ராக்கிங் சேட்டையை முதலில் தவிர்ப்பதே போதுமானதாகும்.

---

### பரமபிதா காட்டிய பாதை



# மரண நிழல்படரும் எம் தேசத்தில் சமாதான ஒளி உதிப்பது எப்போ?

## பாதிப்புற்றோரின் ஆதங்கம் இதுவே

சகோதரன்
### செ. அன்ரன் செல்வநாயகம்

அபிவிருத்தியும் முன்னேற்றமும் ஒருநாட்டின் வழமையான எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடியவையாகும். போரும் வன்முறைகளும் ஒரு நாட்டையும் அந்நாட்டின் மக்களையும் இருளின் பாதைக்கு அழைத்துச் செல்வதாகும். வலியார் மெலியாரை அடிமை கொள்வதும் அடக்கி ஆள்வதும் உலகைப் பிடித்துள்ள சாபக்கேடாக அமைந்து காணப்படுகின்றது. இருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் காண்பதும், மரண நிழல்படரும் நாட்டில் ஒளி உதிப்பதும் எம் தேசத்தின் மக்களின் அவாவாக உள்ளது

#### மாட்டுத்தொழுவம்

இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னே அகஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார். அதன்படி மக்கள் தங்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குப் போனார்கள். தமது பெயரைப் பதிவு செய்துகொள்ள, கர்ப்பவதியான தனது மனைவி மரியாளுடன் யோசேப்பும் பெத்தலேகம் போனார். அங்கு மரியாளுக்கு பேறுகால வேதனை ஏற்பட்டது. சத்திரத்தில் அவர்களுக்கு தங்க இடம் கிடைக்கவில்லை. மக்களின் மனங்கள் மரத்துப்போய்க் காணப்பட்டன. மாட்டுக்குடிலே மாபரன் பிறக்கும் மஞ்சமானது. இடையர்களே இயேசு குழந்தையைப் பாதுகாப்பவர்களாகவும், ஆதரவாளர்களாகவும், மாட்டுத்தொழுவம் விரைந்தார்கள். வெள்ளை உள்ளம்கொண்ட அவர்களுக்குத்தான் இயேசுவின் பிறப்புச் செய்தி அறிவிக்கப்பட்டது. வானதூதர்கள் தான் அந்தச் செய்தியை அறிவித்தார்கள். ''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சிமை உரித்தாகுக, உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக'' (லூக் 2:14) என்று சமாதானத் தூதுவனாகப் பிறந்துள்ள இறைமகனை அடையாளப்படுத்தினர்.

#### உள்ளக் கோயில்

உள்ளத்திலே எளிய மனங்கொண்டவர்களும், நீதிக்காகக் குரல்கொடுப்பவர்களும் இறைவனின் மக்கள் எனப்படுகின்றார்கள். அநீதியின் பிடியில் இருந்து மக்களை மீட்க அந்தகாரத்தின் இருளில் இருந்து மக்களை விடுவிக்க பாவத்தின் கொடூரத்திலிருந்து விடுதலை வாழ்வளிக்க இறைவன் வாக்களித்திருந்த இயேசு குழந்தையாக இவ்வுலகில் பிறந்தார். மீண்டும் கிறிஸ்து பிறக்க வேண்டுமானால், அவர் உலகத்தில் அல்ல, எமது உள்ளங்களையே கொட்டிலாக மாற்றுமாறு கேட்கின்றார். வஞ்சகம், கபடு நிறைந்த எம் ஒவ்வொருவரின் உள்ளங்களையும் இறைவன் வாசம் செய்யும் கோயிலாகமாற்ற நாம் ஒவ்வொருவரும் எம் உள்ளங்களை அன்பு என்ற ஒளியாலே பிரகாசிக்கச் செய்வோம். அப்போது அந்த ஆண்டவன் எம் உள்ளக் கோயிலில் வந்து பிறந்து எமக்கு அமைதி அளிப்பான்.

---

# புத்திரப்பேறு இல்லாமல் போவதற்கு தோஷ ஜாதக அமைப்பே காரணம்

## சோதிடக் கலையின் தாற்பரியமும் இதுவே

திருமணம் செய்து கொள்வதன் நோக்கமே, சந்ததி நசிந்து போகாமல், வம்ச வாரிசுக்கு ஒரு சில குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என்பது தான். புத்திரப்பேறு இல்லாமல் போவதற்கு புத்திரதோஷம் என்ற ஜாதக அமைப்பு இருப்பது தான் காரணம். மகேந்திர பொருத்தம் பலமாக இருந்தாலும், கர்மகாரகனாகிய அங்காரகன் என்ற செவ்வாய் ஆட்சி அல்லது உச்சம் பெற்று இருந்தாலும், கர்மஸ்தானமான 10 ஆம் இல்லத்தை அங்காரகன் பார்த்தாலும் சரி அந்த ஜாதகருக்கு கர்மபுத்திரர் என்ற அமைப்பு ஏற்படவே செய்யும்.

#### புத்திரதோஷம்

பிறக்கும் குழந்தையின் ஜனன லக்கினத்திற்கு இரண்டாம் இடத்தில் அங்காரகன் தனித்து இருந்தால் அடுத்து ஆண்சகோதரன் உடனே பிறக்கும். இதற்கு இடைவெளி 1¼ முதல் 2 ஆண்டுகள் இருக்கும், புத்திரஸ்தானம் லக்கினத்திற்கு 5 ஆம் வீடு என்று இருந்தபோதிலும். லக்கினாதிபதி நின்ற ஸ்தானத்திற்கு 5 ஆம் இடத்தைப்பற்றியும் கண்டறிந்து புத்திர உற்பத்திக்கான பலன் சொல்ல வேண்டும். லக்கினத்திற்கு 1-5-9ல் சர்ப்பக்கிரகங்களான ராகு, கேதுக்கள் இருந்தால் அது புத்திரதோஷமுடைய ஜாதகமென்பார்கள. 5ல் குரு அல்லது சனி இருந்தாலும் கூட அது புத்திர தோஷமுடைய ஜாதகம் தான். பெண்களுக்கு 9 ஆம் இடத்தில் ராகு- கேது இருந்தால் அது பலத்த புத்திர தோஷமாகும். இத்தகைய ஜாதகர்களுக்கு வம்ச வாரிசுக்குஆண் சந்ததி பிறப்பது அரிது என்றாலும், கர்ம ஸ்தானமான பத்தாம் இடத்தை கர்மகாரகனானசெவ்வாய் பார்த்தாலும், அல்லது குருபார்த்தாலும் அல்லது கர்மஸ்தானாதிபதி ஆட்சி பெற்றிருந்தாலும் அந்த ஜாதகருக்கு 40 வயதிற்குப்பிறகு கர்மபுத்திரர் என்ற அமைப்பில் தப்பாமல் ஆண் சந்ததி பிறக்கும் என்பது சாஸ்திர விதி, புத்திர தோஷம் பலமாக இருந்தால். இந்த விதிமுறை அடிபட்டுப்போகிறது.

#### புத்திரப் பேறின்மை

லக்கினத்திற்கு இரண்டில் சனிஇருந்தால் அந்தஜாதகருக்கு தத்துப் புத்திரர் என்ற அமைப்பு ஏற்பட்டு, பிறகு சுயபுத்திரர் என்றபாக்கியம் கிட்டும் இப்படிப்பட்ட சனி

### சோதிட பலன்

உச்சமாகஇருந்தால் இந்த விதிமுறை தளருகிறது ஜனன லக்கினத்திற்கு முன்னும் பின்னும் ஜனன லக்கினத்திலும், சந்திரன் நின்றஸ்தானத்திற்கு முன்னும் பின்னும், சந்திரனுடனும் நைசர்க்கிக பாவக்கிரகங்கள் இருந்தால் புத்திரப்பேறே இல்லையாம். இதுஅனுபவத்தில் சரி என்று சொல்லப்படுகிறது. புத்திரஸ்தானத்தில் சந்திரன் இருந்தால் நிறையக் குழந்தைகள் உண்டு என்றும், அப்படிப்பட்ட புத்திரர்களால் ஜாதகருக்கு என்றும், விரோதமும், பகையும் உண்டுஎன்று சொல்லவேண்டும், பெண்குழந்தைகள் அதிகமாகவும் ஆண் குழந்தைகள் குறைவாகவும் இருக்கும்.

#### புதன் இருந்தால்

புத்திரஸ்தானமான ஐந்தாம் இடத்தில் புதன் இருந்தால், நல்ல அறிவுள்ள, விவேகமான புத்திரர் பிறக்கும், அப்புத்திரர் யோசனை சொல்லும் அமைச்சராகவும், யோகமுடையவராகவும் இருப்பார் என்றும் 5ல் உள்ள புதன் நீசமானால் இந்தவிதி மாறும் என்றும் சொல்வர். ஒரு ஜாதகத்தில் பெண் ராசிகளான இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவற்றில் சந்திரன் புதன்- சுக்கிரன் இருந்தால் ஜாதகருக்குப் பெண் குழந்தைகளே பிறக்குமாம், அதிலும் பாபக்கிரகங்கள் இந்தப் பெண் இராசிகளைப் பார்த்தால், அவருக்குப் பலவீனமும், துர்ச்செய்கையுமுள்ள பெண் குழந்தைகளாகவே பிறக்குமாம்.

#### புத்திர நாசம்

லக்கினாதிபதி நின்ற ஸ்தானத்திற்கு ஐந்தில் சனீ பகை அல்லது நீசம் பெற்றிருந்தால், இறுதிவரையில் புத்திரன் இல்லை புத்திரஸ்தானாதிபதியும், அத்துடன் கூடியுள்ளகிரகமும் அக்கிரகங்களைப் பார்க்கும். பிற கிரகங்களும், அந்த ஜாதகருடைய நட்சத்திராதிபதியும், பாபக்கிரகங்களாயிருந்தால், அவருக்குப் புத்திரர்கள் பலர் பிறந்தபோதிலும் அனைத்தும் நாசமாய்ப் போய்விடுமாம் ஜனன லக்கினத்திற்கு 1-5-9 ம் இடங்களில் நைசர்க்கிக பாபக் கிரகங்கள இருந்தால், அது புத்திர ஜனனத்திற்கான யோகத்தைத்தராது என்று சொல்லப்படுகிறது. ஒருவேளை புத்திரபாக்கியம் ஏற்படக் கூடியதானால், அவயவக் குறைவு ஏற்படும் வகையில், உடலில் ஏதாவது ஒருபாதிப்பு ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட ஜாதகர்கள் வழிப் பிரயாணங்களிலும், வண்டிகளில் ஏறிஇறங்கும்போதும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். புத்திரப் பேறு இல்லாமல் எந்தப் புண்ணிய கருமங்களைச் செய்தாலும் அவர்களுக்குப் (மோட்சம்) பலன் இல்லை.

— நன்றி —
சோதிடக் களஞ்சியம்

---

அபிவிருத்திச் சபைக்
### கூட்டம்

(இருபாலை)
வலிகிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலக அபிவிருத்திச் சபைக் கூட்டம் அண்மையில் மேற்படி பிரதேசசபை தலைவர் பூ குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அபிவிருத்திச் சபைக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது தலைவர் கி. தங்கவடிவேல், செயலாளர் து தனபாலசிங்கம், பொருளாளர் க.கிருபாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி கூட்டத்தில் வலிகிழக்கு பிரதேச சபை உப தலைவரும், ஈபிடிபியின் வலிகிழக்கு அமைப்பாளருமான யு.எல் ஏ ரவி அவர்களும் கலந்து கொண்டார். (இ)

### செயலணிக் கூட்டம்

(இருபாலை)
சிறுப்பிட்டி மேற்கு ஜே/272 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணிக் கூட்டம் சமுர்த்தி உத்தியோகத்தர் பி ஜயேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது

சிறுப்பிட்டி அரசினர்தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் வசந்தி. அப் பகுதி கிராம உத்தியோகத்தர் உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளின் கிளைக்குழுத் தலைவர்கள, செயலாளர்கள் ஆகியோரை சங்க மண்டபத்தில் இன்று சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இக் கலந்துரையாடலில் கிளைக் குழுத் தலைவர்கள், செயலாளர்களை கலந்து கொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார். (4)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் ஐ.நா. சபையில் விவாதிக்கவேண்டும்

## ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நீண்டகாலமாக நடைபெறும் இனமோதலுக்கு முடிவுகாண, ஐக்கிய நாடுகள் சபையில் இனப்பிரச்சினை தொடர்பாக, அவசர கால கூட்டத்தொடரில், விவாதிக்க வேண்டும்.

ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் 46 வது ஆண்டு நிறைவு மேலாளர் மாநாட்டில் முன்னாள் தலைவர் ஸ்ரான்லி பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராஜகிரியவில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இனப்பிரச்சினையை சுமுகமாக தீர்க்க இருதரப்பும் இப்பிரச்சினை தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் அவசரகால கூட்டத்தொடரில் விவாதிக்குமானால் நல்லதொரு, தெளிவான தீர்வை நாம் பெற்று விடமுடியும்.

அவ்வாறு தீர்வு கிட்டாது போயினும், இப்பிரச்சினையை தீர்ப்பதில் இடையூறாக நிற்பவர் யார் என்பதை சர்வதேச சமூகம் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

இதனால் சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தையும் பெற்று விடமுடியும் என்றும் அவர் மேலும தெரிவித்துள்ளார். (இ)

## கண்ணீர் விட்டழுத கடல்பன்றி உயிர்தப்பியது

(ஊர்காவற்றுறை)

கடல்பன்றி கண்ணீர்விட்டு அழுததையடுத்து மீண்டும் கடலினுள் விடப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் நயினாதீவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது நயினாதீவு கடற்றொழிலாளரினால் அக்கடற்பகுதியில் கடற்பன்றி ஒன்று பிடிக்கப்பட்டது. அப்பன்றியை விற்பனைக்காக யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு ஆயத்தம் செய்தபோது அப்பன்றி கண்ணீர் விட்டுஅழுததுஇதையடுத்து அக் கடல்பன்றி மீண்டும் உயிருடன் கடலினுள் விடப்பட்டது.

இப்பன்றி 150கிலோ எடை கொண்டது. என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-75

### புலிகள்

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இக்கூட்ட ஆரம்பத்தில் பெருந்திரளான மக்கள் ஊர்வலமாககூட்டமைதானத்தை வந்தடைந்தனர்.

காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கத் தலைவர் ஈ. பி. நாணயக்காரா பேசுகையில்! தற்பொழுது விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையே இடம்பெற்றுவ ம் யுத்தத்தினால் பெருமளவு உயிர்கள் அளிக்கப்பட்டுவருகிறது எனவே அரசு விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பிற்கு சாதகமான பதில் அளித்து யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டு உடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறினார்.

கூட்டம் நேற்றுக்காலை 9 மணி முதல் மாலை 5மணி வரை நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (வ

## கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

பிரிட்டிஷ் செல்வதற்கான சகலவிதமான விசா கட்டணங்களும் ஜனவரி மாதம் 2ம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக பிரிட்டிஸ் தூதரக விசாப் பிரிவு அறிவித்துள்ளது.

மாணவர்களது விசா, சாதாரணவிசா, ஆகியவற்றுக்கானகட்டணம் 4125 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது;

வதிவிட விசாக்கட்டணம் முப்பதாயிரம் ரூபாவாக அதிகரிப்படும். சகல கட்டணங்கள் பற்றியவிபரங்களையும் பிரிட்டிஷ் தூதரகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (வ)

### யுத்தநிறுத்த அறி...

ளின் கருததுக்களைக் கேட்டறிந்து யுத்தநிறுத்தத்திற்கானசாத்தியக் கூறுகளை ஆராயவுள்ளார்,

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தின்போது, புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு. அரசின் யுத்தநிறுத்த நிராகரிப்பு, மீளாய்வு வேண்டுகோள் ஆகியன குறித்தும் ஜனாதிபதி ஆராய்வார் என்று சிரேஷ்ட தொழில் அமைச்சர் அலவிமௌலானா தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தின்போது அண்மையில் பரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பெறுபேறுகள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

### அமைச்சரவை பரிசீலித்து யுத்தநிறுத்த அறிவிப்பை விடும

சுதந்திரக்கட்சிகளின் மத்திய குழுக்கூட்டத்தை அடுத்து அடுத்தநாள் 3ம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின் போது புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு தொடர்பாக மிகவும் கவனமாகப் பரிசிலனை செய்யப்பட்டும் அரசு யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென்ற சர்வதேச அழுத்தங்களையும் ஜனாதிபதி அரசியல், பொருளாதார நிலைகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தபின் யுத்த நிறுத்த அறிவிப்பொன்றை 3ம்திகதிக்குப் பின் ஜனாதிபதி விடுப்பார் என தொழில் அமைச்சர் அலவி மௌலான தெரிவித்தார்.

### சிரேஷ்ட; அமைச்சர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் ஆதரவு

இதேவேளை அரசியலிலுள்ள சில சிரேஷ்ட அமைச்சர்களும் சுதந்திரக் கட்சியின் சில முக்கியஸ்தர்களும் அரசு செய்யவிருக்கும் யுத்த நிறுத்த ஏற்பாட்டிற்கு எவ்வகையிலும்ஆதரவு நல்கப்போவதாகவும் கட்சியின் உயர்பீட பிரமுகர்கள் வெளியிட்டுள்ள கருத்தை அமைச்சர் அலவி மௌலான மறுதலிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகுமென அரசியல் ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

## விசாரணைக் குழு

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை தொடர்பானவிசாரணைகளைநடத்த குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளை மேற்கொள்ள நிமலராஜனின் கொமஷல் வங்கி கணக்கு இலக்கம் தேவைப்படுவதாகவும் பொலிசார் மேலும்தெரிவித்துள்ளனர். (இ-12

சயன்ஸ் அக்கடமி
நல்லூர்
தரம் 4 முதல் O/L வரை
புதிய மாணவர்களை மீண்டும் பிரிவு IIல் இணைக்க
அனுமதிகள் இன்று முதல் புதிதாக வழங்கப்படுகின்றன.
(2053)

### மினி...

இதேவேளை இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கருகில் ''தமிழீழ சீர்திருத்தக் குழு'' என்ற பெயரில் துண்டுப் பிரசுரங்களும் காணப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம)

### மிருசுவில்...

யப்பட்டனர்.

நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் ஆஜர் செய்யப்பட்ட ஆறு இராணுவத்தினர் விபரம் வருமாறு:

★ லெப்டினன்ட் றாவிந்த திஸநாயக்கா (சீதுவை) 2ம் லெப்டினன்ட் ஆர். டபிள்யூ. சேனக முனசிங்க (தம்புத்தகம)
★ சார்ஜன் கே. இராஜபக்ஷ (காபோவில்)
★ லான்ஸ்கோப்ரல் டி. என் ஜெயரட்ண (நுவரெலியா)
★ கப்டன் லான்ஸ் கோப்ரல் ஆர். டபிள்யூ. துஷந்த சஞ்சீவசார
★ சிப்பாய் எம். மகிந்த குமார

இதேவேளை மகியங்கனையைச்சேர்ந்த லான்ஸ் கோப்ரல் கே. எம். எஸ். ரட்னாயக்கா கடந்த புதன்கிழமை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்தேக நபர்கள அனைவரையும் ஜனவரி மாதம் 10ம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (வ-23)

## நெருப்புக் காய்ச்சல்

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட துன்னாலையை அண்டிய பகுதிகளில் நெருப்புக்காய்ச்சல் தொற்றுநோயின் தாக்கம்அதிகரித்துக் காணப்படுகிறது.

அல்லையம்பதி,துன்னாலை கிழக்கு,கிழவித்தோட்டம், கரவெட்டி தெற்கு பகுதிகளில் இருந்து இந்நோயின் தாக்கம் காரணமாக இதுவரை பத்திற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட பகுதி சுகாதார பரிசோதகர் க.இளங்கோ நெருப்புக்காய்ச்சல்வராது தடுக்கும்முறை மற்றும் அதனோடு தொடர்பான விடயங்கள் குறித்து மக்களுக்கு விளக்கமளித்து வருகிறார். (உ-23)

### யுத்த

தார்.

இந்தப் பேட்டியில் அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்திருப்பதாவது:

விடுதலைப் புலிகளின் யுத்தத்தில் தோல்வி அடையும்போது இத்தகைய யுத்த நிறுத்த அறிவிப்பை விடுவது வழமையான செயலாகும் இது அவர்களது யுத்ததந்திரோபாயமாகும்.

1995ம் ஆண்டிலும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்திருந்தனர் அதனை அரசாங்கமும் அங்கிகரித்திருந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அதனை யுத்தரீதியில் பயன்படுத்திக் கொண்டனர் என்று அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் மேலும் தெரிவித்தார். (வ)

மகிழ்ச்சியான செய்தி!
ஆரம்பிக்கின்றோம்
A/L 2003
(கலைவர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி -- 06
காலை 8-00 மணி
DMI
யாழ்நகர்
(1997)

பிறந்தநாள் வாழ்த்து
செல்வி கனுஷியா குணசீலன்
ஆசீர்வாதப்பர் வீதி நல்லூரைச் சேர்ந்த திரு. திருமதி குணசீலன் பிறேமலதா தம்பதியினரின்செல்வப் புதல்வி கனுஷியா தனது பத்தாவது பிறந்தநாளை இன்று 31. 12. 2000 ஞாயிற்றுக்கிழமை தமதில்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அம்மா, அப்பாவுடன் அக்கா ஜெனி, மற்றும் அம்மம்மா, ஐயா, அப்பம்மா, அப்பப்பா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார் அக்காமார், தம்பிமார், தங்கைமார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அரியாலை வெட்டுக்குளப் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
தகவல்
செ. தனேஸ்
நல்லூர் (கி/1304)

## ஹினிகிர-8 இராணுவ நடவடிக்கை

# நாவற்குழிபாலம் இராணுவத்தினரின் கட்டுபாட்டின் கீழ் வந்துள்ளது?

## இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

நேற்று காலை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஹினிகிர-8 படைநகர்வு நடவடிக்கை மூலம் தென்மராட்சியின் நாவற்குழி பாலத்தையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் கைப்பற்றியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

விமானப்படையினர் மற்றும் பீரங்கிப் பிரிவின் உதவியுடன் முன்னேறிய துருப்பினர் தற்போது கைப்பற்றப்பட்ட பிரதேசங்களின் பாதுகாப்பை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும்

இந்த வகையில் அப்பகுதிகளில் காணப்படும் நிலக்கண்ணிகள் மற்றும் மிதிவெடிகள் என்பன அகற்றப்பட்டு வருவதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அச்செழு இராணுவ முகாமில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் எனக் கருதப்படும் இடங்களை நோக்கி நேற்றுக் காலையில் இருந்து மதியம் வரை இடையிடையே எறிகணைத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையையும் அவதானிக்க முடிந்தது.

இது இவ்வாறிருக்க வெள்ளி மாலை முதல் ஆவரங்கால், நீர்வேலி தரவைப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த படையினர் இப்பகுதிகளினின்றும் வெளியேறி கோப்பாய் பகுதியூடாக கைதடிப் பால முன்னரங்கப் பகுதிகளை நோக்கி நகர்ந்ததை அவதானிக்க முடிந்தது.

இதனை அடுத்து நீர்வேலி தரவைப் பகுதியிலுள்ள காவலரண்களிலிருந்து சீற்வகைகள் மக்களால் அகற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது, (உ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல . 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.